REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55650

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 4உ புதன் (20—10—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 5உ வியாழன் (21—10—54) [இதழ் 110

தூத்துக்குடி வழக்கில் விசாரணை முடிவு

திருநெல்வேலி, அக். 19—

தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், கே. வி. கே. சாமி, சிவசாமி, நடராசன், ரத்தினம் உள்பட 50 தோழர்கள் மீது நெல்லை அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி திரு. கே. என். இராதாகிருஷ்ண முதலியார் முன்னிலையில் நடைபெற்று வரும் தூத்துக்குடி சதி வழக்கு விசாரணையில், இருதரப்பு விவாதங்களும் முடிவடைந்துவிட்டன. குற்றம் சாட்டப்பட்டோர் மீதுள்ள 13 குற்றச்சாட்டுகள் பற்றி 4 அசெசர்களும் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். தீர்ப்புக் கூறுவதற்காக வழக்கை இம்மாதம் 27-ம் தேதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

"சர்க்கார் அதிகாரிகளிடையே ஒழுக்கமும் திறமையும் குலைந்துவிட்டன"

'உத்தியோக உயர்வுக்காக அதிகாரிகள் அமைச்சர்களிடம் தஞ்சம்'

'அதனால் நடு நிலைமை தவறாத பண்பு தொலைந்தே விட்டது'

ஏழாண்டு 'சுதந்திர' ஆட்சியின் விளைவு பற்றி பி. டி. இராஜன்

மதுரை, அக். 18—

"ஏழாண்டு சுதந்திர ஆட்சியில் நடைபெற்றுவரும் அரசியல் தலையீட்டின் காரணமாக, சர்க்கார் அதிகாரிகளிடை ஒழுக்கமும், திறமையும் சீர்குலைந்து கிடக்கின்றன."

—மேற்குறித்தவாறு, பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட பி. டி. இராசன் அவர்கள் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது :—

"சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பாக சர்க்கார் அதிகாரிகளால் வழிகாட்டிகளாகக் கொள்ளப்பட்டுவந்த நடைமுறை மரபுகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டுவிட்டன.

"தங்களுடைய உத்தியோக உயர்வுக்காக, முன்பெல்லாம் குறிப்பிட்ட துறையின், உயர் அதிகாரிகள் எதிர்பார்க்கப்பட்டு வந்ததற்குப் பதிலாக, இப்பொழுது அதிகாரிகள் அமைச்சர்களின் தயவுக்குக் காத்துக்கிடக்க வேண்டியவர்களாக உள்ளனர். அதன் பலனாக அவர்களுடைய நோக்கும் பழுதுபட்டு, செயலும் பாரபட்சமுடையதாகப் போய்விட்டன.

"சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்தான், ஒரு சர்க்காருக்கு முதுகெலும்புபோல் இருக்கக் கூடியவர்கள். எனவே, அவர்களுடைய நிர்வாகத்தில் ஏற்படும் தரக் குறைவு, மிக பயங்கரமான விளைவுகளை உண்டாக்குவதாக இருக்கும்.

"இந்திய நிர்வாகத்துறைக்கு ஆட்கள் பொறுக்கப்படும் முறை தவறானதாகும். இப்புதிய அமைப்பில், குறிப்பிட்ட அதிகாரியின் பண்பாடும், சேவா உணர்ச்சியும்தான் முக்கியமாகக் கொள்ளப்படவேண்டும். அதிகாரிகளிடம் நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்படவேண்டும்.

"சட்டங்களை அலட்சியமாக மக்கள் கருதி நடந்துகொள்வதற்கு காங்கிரஸ் சர்க்காரே பெரிதும் காரணம். கல்வித் துறையை சர்க்கார் குழப்பி விட்டிருக்கிறது!"

சீன அதிகாரிகளைக் கொல்ல......

சியாங் கும்பல் சதி செய்தனவாம்

16 பேருக்கு தூக்கு

காண்டனில் உள்ள சீன நீதிமன்றம் ஒன்று, சீன அரசாங்கத்தின் தலைமை அதிகாரிகள் சிலரைக் கொல்ல சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட 16 பேர்களுக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறியுள்ளது.

இந்த 'சதிக் கூட்டத்தவர்', அமெரிக்க சியாங்-கே-ஷேக்கின் இரகசியப் போலீசாரால் ஏவிவிடப்பட்ட கையாட்களாம்!

இன்னும் வேறு 28 பேர்களுக்கு பல தரப்பட்ட சிறைவாச தண்டனை தரப்பட்டதாம்.

ம. பி. முதன்மந்திரி மீது லஞ்சக் குற்றம்!

விசாரிக்கக் கோரிக்கை

நாகபுரி, அக். 18—

பிரதம மந்திரி பண்டித ரவி சங்கர் சுக்லா மீதுள்ள லஞ்சக் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய, ஒரு விசாரணைக் குழு நியமிக்க வேண்டுமெனக் கோரி, ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக, நவம்பர் 7-ல் விசாரணை கோரும் நாள்' கொண்டாடுவதென, மத்தியப் பிரதேச பிரஜா சோஷலிஸ்டு கட்சியின் செயற் குழு முடிவு செய்துள்ளதாம்.

சார் பகுதியின் எதிர்காலம்!

பிரான்ஸ் - மே. ஜெர்மனி இணக்கம்

பாரிஸ், அக். 19—

பிரெஞ்சுப் பிரதமர் மென்டஸ் பிரான்ஸ்—மேற்கு ஜெர்மனியின் சான்சிலர் அடினூர் ஆகியோரிடையே சார் பகுதி பற்றி பொதுவாக ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது என்று தெரிகிறது.

இதுபற்றிய பேச்சுக்கள் மிகவும் இரகசியமாக நடைபெற்றதாம். இப்பேச்சுக்கள் நாளை லண்டனில் முடிவுபெற இருக்கும் மேற்கு ஜெர்மனியை அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் சேர்க்கும் முயற்சியில் முக்கியமானது என்று கருதப்படுகிறது.

குடந்தை டாக்டர் நாயர் கட்டிட உரிமை மாற்றம்?

பெரியார் பெயருக்கு மாற்றுவதற்குத் தடை!

கும்பகோணம், அக். 18—

27—11—1940-ல், டி. எம். நாயர் நினைவுக் கட்டிடம் வாங்கப்பட்டு, 9 'டிரஸ்டி'களைக் கொண்டு அது இயங்கி வருகிறது.

இந்தக் கட்டிடம், கும்பகோணம் நகரில் நாகேசுவரன் வடக்குத் தெருவில் அமைப்பெற்றுள்ளது.

'டிரஸ்டி'க் குழுவின் செயலாளர்களாக ஆர். சி. வெங்கடராம நாயுடு, பி. முத்துதனபால செட்டியார் ஆகிய இருவரும் பணியாற்றி வருகின்றனர்.

இந்தக் கட்டிடத்தை, திராவிட கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி பெயருக்கு மாற்றிவிட மேற்குறிப்பிட்ட 'டிரஸ்டி'கள் தீர்மானம் செய்து, அந்தக் குழுவின் சார்பில் திரு. ஆர். பி. சுந்தரம் அவர்கள், பெரியார் அவர்கட்கு இந்தக் கட்டிடத்தை மாற்றிவிட ஏற்பாடுகள் செய்து வருகிறார் என்றும், 'டிரஸ்டு' பத்திரத்தில் கூறியுள்ள விதிப்படி, அந்தக் கட்டிடத்தை யாருக்கும் விற்கவோ, மாற்றவோ கூடாது என்று இருப்பதால், இந்தவிதமாக இக்கட்டிடத்தைப் பெரியாருக்கு மாற்றப்படுவதை எப்போதுமே தடை செய்யக் கோரிக்கொண்டும், இந்நகர் கஸ்பா முனிசீப் ஆர். ராம சுப்பிரமணியம் முன்னிலையில் ஆர். பி. சுந்தரம், பெரியார் ஈ. வெ. ரா. ஆகிய இருவர் மீதும், நகரைச் சேர்ந்த வி. சின்னத்தம்பி, எம். ஆர். சுப்பிரமணிய மூப்பனார் ஆகிய இருவரும் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

இந்த வழக்கைப் பதிவு செய்துகொண்ட முனிசீப், தற்காலிக தடை உத்திரவு ஒன்றை பிறப்பித்துள்ளார்.

மேற்படி வழக்கின் விசாரணை 20—10—54 அன்று எடுத்துக் கொள்ளப்படும்.

வாதிகள் சார்பில் வழக்கறிஞர் ஏ. பார்த்தசாரதி நாயுடு வழக்காடுகிறார்.

ரயில் நிலையப் பெயர்ப் பலகைகள்

தமிழுக்கு முதலிடம் அளிக்க அதிகாரிகள் உத்திரவு

சென்னை, அக். 19—

தமிழ்நாட்டில் உள்ள ரயில்வே நிலையங்களின் பெயர்ப் பலகைகளில் முதலில் தமிழிலும், அடுத்து அதன் கீழ் இந்தியிலும், அதன் கீழ் ஆங்கிலத்திலும் பெயர்கள் எழுதப்பட வேண்டுமென்று ரயில்வே போர்டார் உத்திரவிட்டதாகத் தெரிகிறது.

ரயில்வே போர்டின் உத்திரவு சீக்கிரமே சென்னைக்குக் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்ற மூன்றாண்டுகளாக திராவிடக் கழகத்தினரும், திராவிட இயக்க அனுதாபிகளும் தமிழ் நாட்டில் உள்ள ரயில் நிலையங்களில், இந்தியில் முதலில் பெயர் எழுதப்பட்டிருப்பதை எதிர்த்தும், இந்திக்குத் தென்னாட்டில் ஆதிக்கம் கூடாது என்பதை எதிர்க்கவும் போராட்டம் நடத்தி, தார் கொண்டு ரயில் நிலையத்தில் உள்ள இந்திப் பெயர்களை அழித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

செங்கல்பட்டு மாவட்டக் கழக தேர்தல் எதிரொலி!

ஒழுங்கு தவறி நடந்ததாக சி. வி. எம். அண்ணாமலை வழக்கு?

29—9—54-ல் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்டக் கழகத் தேர்தலில், காஞ்சீபுரம் தாலுக்கா, பரந்தூர் பிர்க்காவில் தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, எம். ஜி. பாலராமன் ஆகியோர் சுயேச்சையாகவும், திரு. எஸ். கணபதி நாயகர் காங்கிரஸ் சார்பிலும் போட்டியிட்டார்கள்.

திரு. எஸ். கணபதி நாயகரும், அவரது ஆட்களும், தேர்தல் சட்ட விதிக்கு மாறாக, வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்தும், ஆள் மாறாட்டம் செய்தும், இறந்தவர்களுக்குப் பதிலாக வாக்களிக்கச் செய்தும், லாரி, கார் முதலியவைகளில் வாக்காளர்களை அழைத்து வந்தும் ஓட்டுச் செய்து, தோழர் அண்ணாமலையைவிட 114 ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருப்பது செல்லத்தக்கதல்ல வென்று, செங்கற்பட்டு மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் வழக்கறிஞர் தோழர் சி. பி. தாமோதரன் அவர்களைக்கொண்டு மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

ஓட்டுகள் விபரம் :—

எஸ். கணபதி நாயகர் (கா)

சி. வி. எம். அண்ணாமலை (சு)

எம். ஜி. பலராமன் (சு)

[illegible]

மாலங்கோவை சந்திக்கத் தயார்!

சர்ச்சில் அறிவிப்பு!

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பிரதமர் சர்ச்சில், சரியான நேரமும், சந்தர்ப்பமும் கிடைத்தால், தான் ரஷியப் பிரதமர் மாலங்கோவைச் சந்திக்கத் தயார் என்று கூறினார்.

தொழிற் கட்சி உறுப்பினரான ரெஜினால்டு சோரன்சன் கேட்ட கேள்வி ஒன்றிற்குப் பதில் அளிக்கையில்தான் சர்ச்சில் மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் கிருஷ்ணசாமி (முதலியார்) காலமானார்

சென்னை, அக். 20—

பச்சையப்பன் கல்லூரி பேராசிரியர் தோழர் க. அன்பழகன் அவர்கள் மாமனாரும், தோழர்கள் : டாக்டர் ராஜசுந்திரம், ஜேயபால் (D. E.), வெற்றி செல்வி ஆகியோரின் தந்தையாருமாகிய டாக்டர் கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள், தனது 80-வது வயதில் இன்று காலை 10 மணியளவில் புரசைவாக்கம் வேளாளத் தெரு, எண். 10 உள்ள அவர்கள் இல்லத்தில் இயற்கையெய்தினார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். இவரது பிரிவால் வாடும் குடும்பத்தினர் யாவருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று மாலை 6 மணிக்கு சவ அடக்கம் நடைபெறும்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 20—10—1954 புதன்

இரண்டாம் வெற்றி!

வடவர் ஆதிபத்தியத்தின் சிகரம்போலும், திராவிடர் தன்மானத்தை கறைபடுத்திக் கொண்டும் இருந்த 'தால்மியாபுரம்' தவிடுபொடியாகிவிட்டது. இனி, அப்பெயரிருந்த இடத்தில், 'கல்லக்குடி' என்ற தமிழ்த் திருப்பெயர் அணி செய்யும்.

இந்தச் செய்தியும், காட்சியும், ஒவ்வொரு திராவிடர் உள்ளத்தையும் பூரிப்படையச் செய்யும். திராவிடர் ஒருவரை ஒருவர் சந்திக்குங்காலை, இழந்த உரிமையை மீண்டும் பெற்ற 'கல்லக்குடி' பற்றிப் பேசியே தீருவர்.

பறிகொடுத்தப் பெயரை, பறித்தவரிடமிருந்துத் திரும்பவும் பெற்று புகழ் பரப்புவது என்பது எளிதான செயலன்று. இழந்த 'கல்லக்குடி'யை திராவிடர் திரும்பவும் பெறுவதற்கு, நாம் பேசிய பேச்சு, எழுதிய எழுத்து மலைமலையாகக் குவிந்து கிடக்கின்றன. நினைத்ததை நிறைவேற்றிக்கொள்ள எழுத்தும், பேச்சுமே போதும் என்ற முடிவுடன் மக்கள் கருத்துக்கு மதிப்பேற்படுவது மக்களாட்சி முறையின் உயர்மாண்பாகக் கருதப்படுவது மேல் நாடுகளின் எல்லைக்குள் கட்டுப்பட்டுவிட்டது. ஆனால், இங்கோ, மன்றமேறியுள்ளவர் மக்கள் விருப்பத்தை மதிக்காது, தான்தோன்றித்தனமாக நடப்பதைத்தான், மக்களாட்சி எனக் கொக்கரித்துக்கொண்டு கோலோச்சுபவர்களாவர். எனவே, இவர்கள் குடியாட்சியில், தங்கள் கோரிக்கைகளில் வெற்றிகாண, எழுத்தோடும் பேச்சோடும் நின்றுவிடாமல், வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டியதாக இருக்கின்றனர் குடிமக்கள்.

கல்லக்குடி பெயர் மாற்றம், இன்றைய ஆட்சியாளர்களைப் பற்றிக் கொண்டுள்ள மூலக் கோளாறைத்தான் வலியுறுத்துகிறது.

"தால்மியாபுரம் என புகை வண்டி நிலையத்திற்கு இடப்பட்டுள்ள பெயர் திராவிட இனத்தின் மானத்தைக் களங்கப்படுத்துவதாக இருக்கிறது. அப்பெயரை மாற்றி அதற்கு இடவேண்டிய நியாயமான 'கல்லக்குடி' என்ற பெயரை உடனடியாக இடவேண்டும்" என நமது கழகம், இரயில்வே அமைச்சரை கேட்டுக்கொண்டபொழுதே, அமைச்சர் இணக்கம் தெரிவித்திருக்க வேண்டும். இணக்கம் தெரிவித்தாரா? இல்லை; மாறாக, அந்தப் பெயரை மாற்ற வேண்டியதற்கான அவசியமொன்றுமில்லை என ஆணவமாகக் கூறினார். அமைச்சரின் அலட்சியமான பதில், நமக்கு அதிர்ச்சியையோ, மருட்சியையோ ஊட்டவில்லை; அச்சமும் நமக்கு மூளவில்லை. எப்படி இருந்தாலும், எவ்வளவு விலை கொடுத்தாகிலும், 'தால்மியாபுரம்' என்ற பெயரை ஒழித்துக் கட்டுவது என்று நாம் சூளுரைத்துக் கொண்டோம்.

திருச்சி மாவட்டக் கழகம், பழஞ்ஞாநத்தம் ஊராட்சி மன்றம் ஆகிய இரண்டு மன்றங்களும், நமது பெயர் மாற்றம் கோரிக்கையை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றின. இத்துறையில் மாற்றம் வேண்டுமென சில மாவட்டக் கழகங்களும், நகராட்சி மன்றங்களும், ஊராட்சி மன்றங்களும் தீர்மானித்தன. இவ்வளவையும், அதுகாலை இம்மாநிலத்தில் வேரூன்றிக்கிடந்த ஆச்சாரியார் ஆட்சியும், டெல்லி ஆதிபத்தியமும் ஒதுக்கித் தள்ளிவிட்டன.

தீர்மானங்களை நிறைவேற்றினவுடன், மற்றவர்கள் பொறுப்பு முடிவடைந்துவிட்டது. ஆனால், நமது கழகமோ, அறப்போர்க்களம் புகுந்து, அங்குகிளம்பும் புயலை மட்டுமே புரிந்து கொள்ளும் மரபில் வந்த ஆளவந்தார்களுக்கு, புரிய வைப்பது எனக் கங்கணம் கட்டிக்கொண்டது. செய்த முடிவிற்கொப்ப நமது முன்னணி வீரர் இளவல் கருணாநிதியின் தலைமையில், கல்லக்குடி அறப்போர் களம் அமைக்கப்பட்டது. அச்செயல் வீரர், தம்மரும் தம்பிமார்களுடன் கடந்த 1953 ஜூலை 15-ல் புகை வண்டி நிலையம் புகுந்து, தால்மியாபுரம் என்ற இழிபெயரைத் தாங்கிக்கொண்டிருந்த பரப்புகளிலெல்லாம், இழந்த மானத்தைத் திருப்பித் தரும், 'கல்லக்குடி' எனும் திருப்பெயர் பொறித்தத் தாள்களை ஒட்டினர்; அக்கணமே 'தால்மியாபுரம்' மறைந்தது; எழுஞாயிறு போன்று கல்லக்குடி ஒளி வீசத் தொடங்கியது. அவர் திருக்கரத்தால் அன்று துடைக்கப்பட்ட மாசு, இனி, என்றென்றும் மீண்டும் ஏற்படாது என்பது இன்று உறுதியாகிவிட்டது.

திராவிட இனத்தை இழிவுபடுத்திக்கொண்டிருந்த அக்களங்கத்தைப் போக்க அவரும், அவர்தம் தோழர்களும் கொடுத்த விலை ஆறு திங்கள் வெஞ்சிறைவாசமாகும். பலப் பல நாட்கணக்கில் மேலும் பலருக்கு கடுஞ்சிறை வாசம் கிடைத்தது.

சிறையில் சென்றவர்களுக்காவது, 'குறிப்பிட்ட காலம் கழிந்ததும், வெளியில் வருவோம்; வீடு மனைவி மக்களோடு மீண்டும் உறவு கொண்டிருப்போம், என்ற நிலை நிச்சயமாக இருந்தது. ஆனால், 'தால்மியாபுரம்' என்ற மாசைமறைத் தொழிப்பதற்காக, லால்குடி நடராசனும், திருச்சி கேசவனும், தங்கள் உயிரையே அறப்போர் களத்தில், ஆச்சாரியாரின் அக்கிரம ஆட்சிக்கு பலி கொடுத்தனர். கரமிழந்தோர், கால் முறிந்தோர், மண்டை உடைக்கப்பட்டோர், என்ற முறையில் வகை வகையாக, 'கல்லக்குடி' காண, ஆச்சாரியார் ஆட்சிக்கு காவு கொடுத்தனர் நமது கழகக் காளைகள்! குடும்ப வாழ்க்கையில் தம் வாழுநாள் முழுவதும் புகமுடியாத அளவு, முதன் மந்திரியாக இருந்து ஆச்சாரியார் எவிபநாசம் செபஸ்டீன் என்ற இளைஞனை செய்துவிட்டது! கொடுமை! கொடுமை!

சிறையில் பரிசாகப் பெற்ற காச நோயின் காரணமாக, மணப்பாறை குமாரவேல், தம் உயிரை காணிக்கையாகக் கொடுத்திருக்கிறார் — 'கல்லக்குடி' என்ற புனிதப் பெயர் புதுமுகம் காட்ட! அவர்கள் தியாகம், கொட்டிய குருதி, ஏற்றுக்கொண்ட கொடுமை, விழலுக்கிறைத்த நீராகவில்லை; வெற்றியைதேடிக் கொடுத்துவிட்டது! இறந்தவர்களுக்கு நாம் வீரவணக்கம் செலுத்துகிறோம். அவர்கள் திருப்பெயர் வாழ்க என வாழ்த்துகிறோம்; வெஞ்சிறையில் வாடி வெற்றி தேடித் தந்த வீரர்களை நாம் பாராட்டுகிறோம்.

அறப்போர்க் களத்திற்கு ஆச்சாரியார் ஆட்சி நமது கழகக் காளையர்களை அழைத்துக்கொண்டு போய் நிறுத்தி கேடு பல புரிந்ததுகூட, நமக்கு அவ்வளவு வேதனையாகத் தெரியவில்லை. ஆனால், புதுமை அரசியல் பொது வாழ்வினர் சிலர், நமது போர்ப்பரணி கேட்டு, பொருமைகொண்டு, கேலி பேசினர் கேலி, 'பசி தீர்க்குமா? பட்டினி போக்குமா? பஞ்சம் மாய்க்குமா? தால்மியாபுரம் கல்லக்குடியாக மாற்றப்பட்டுவிட்டால், என்று! நமது தன்மானப் போரை, மக்கள் தவறாகப் புரிந்துகொள்ளட்டும் என்ற புன்மதியில், அந்தப் 'புதுமை சித்தர்கள்' கிண்டல் செய்தனர் கிண்டல்! நமது வெற்றிகண்டு, அவர்கள் வெட்கித் தலை குனிவரோ அல்லது வேறு ஒருகடை விரிப்பரோ, மக்கள் கொள்ளுவர் என்ற நம்பிக்கையில்?

நமது பெயர் மாற்றக் கிளர்ச்சி குறித்து சென்னை சட்ட சபையில் கேள்வி எழுப்பப்பட்டது. அதுகாலை ஆட்சியில் கொலு வீற்றிருந்த ஆச்சாரியார், தால்மியாபுரம் எனப் புகை வண்டி நிலையத்திற்குப் பெயரிட்டதும் தவிர அதை மாற்றவேண்டுமெனக் கிளர்ச்சிச் செய்வதும் தவறு என, மாற்றக் கூடாது என்ற தம் மனக் குறிப்பை மார்தட்டிக் கூறினர்! நமது வெற்றிகேட்டு, அந்த மாம்பலம் மாக்கிவல்லி வங்காளகுடாக் கடலுக்குச் செல்லுவாரோ அல்லது இராமாயண காலட்சேபத்தைத் தீவிரமாக்குவாரோ, யார் கண்டார்கள்?

இப்பெயர் மாற்றத்திற்கு, கட்சி வேற்றுமை கருதாது டெல்லி மக்கள் சபையில் உறுப்பினர்கள் சிலர் இரயில்வே அமைச்சரை நெருக்கி இருக்கிறார்கள். தனித்த முறையிலும் சந்தித்து பெயர் மாற்றத்தின் முக்கியத்தை வலியுறுத்தியும் இருக்கிறார்கள். அவர்கள் முயற்சி வென்றமைக்காக, அவர்களையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

'சென்னை அரசியலார் ஒப்புதல் அளித்தால், கல்லக்குடி காண்பதில் எமக்கு ஆட்சேபம் இல்லை' என இரயில்வே அமைச்சர், மக்கள் சபை உறுப்பினர் கோரிக்கைக்கு பதில் தந்துள்ளார்.

ஆச்சாரியார், ஆட்சிபீடத்தில் இருந்தவரை, அவ்வாறு ஒப்புதல் தர முன்வரவில்லை. அவரை விரட்டிவிட்டு ஆட்சியைக் கைப்பற்றியுள்ள காமராசர், பெயர் மாற்றத்திற்கு ஒப்புதல் தந்துள்ளார் என்பது, அன்று இரயில்வே அமைச்சர் கூறிய நிபந்தனையிலிருந்து விளக்கமாகிறது. எனவே, காமராசர் நமது பாராட்டுதலுக்குரியவராகிறார் என்பதில் ஐயமில்லை.

திராவிட நாட்டின் வரலாறு, கல்லக்குடி வெற்றியிலிருந்துதான் துவங்குகிறது. கல்லக்குடி, திராவிடசமதர்மக் குடியரசின் கடைக்காலாகும். கல்லக்குடியை, எதிர்கால திராவிடத் தனி அரசின் பிறப்பிடமாக, தங்கள் தன்னலமறுப்பு சேவையால் உருவாக்கிப் பெருமை பெற்றுள்ள எல்லாத் தோழர்களுக்கும் நமது பாராட்டுதலும், வாழ்த்தும் உரியதாகட்டும்.

நமது கழகம் பெற்ற முதல் வெற்றி—புதியத் தொடக்கக் கல்வி ஒழிப்பு! டால்மியாபுரம் தொலைக்கப்பட்டு கல்லக்குடி காட்சி தருவது—நமது இரண்டாவது வெற்றி!

வாழ்க கல்லக்குடி!

வாழ்க திராவிடம்!

முன்னாள் இராணுவ வீரர்களுக்கு விவசாயப் பயிற்சி

கிராமங்களில் பணியாற்ற வசதி

மத்திய அரசாங்க உணவு, விவசாய அமைச்சர் துறையுடன் கலந்தாலோசித்த பிறகு, அரசாங்க விவசாயப் பள்ளிகளில் 2,250 முன்னாள் இராணுவ வீரர்களுக்கு அடிப்படை விவசாயப் பயிற்சி அளிப்பதற்குரிய ஏற்பாடுகளைப் பாதுகாப்பு அமைச்சர் துறையினர் செய்துள்ளனர்.

இந்தப் பயிற்சிகளில் வெற்றி பெறுவோர் கிராம சேவகர்களாக நியமிக்கப்படுமுன், விஸ்தரிப்புத் திட்டத்தில் 6 மாதம் பயிற்சியளிக்கப்படுவர் என்றும், பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 30 வாழ்க்கைப் படியும், விஸ்தரிப்புத் திட்டத்தில் பயிற்சி பெறுகையில் மாதம் ரூ. 50-ம் கொடுக்கப்படுவார்கள்.

இப்பயிற்சிகளில் சேர்ந்துகொள்வோர் 'மெட்ரிகுலேஷன்' தேர்ந்தவர்களாகவோ, இராணுவ சர்டிபிகேட் பெற்றவர்களாகவோ இருக்க வேண்டும் என்று நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

திரு-கொச்சியில் பிரஜா-சோஷலிஸ்டு ஆட்சியை ஆதரிப்பதேன்?

முரண்பட்ட விளக்கம் தருகிறார் பல்வந்த்ராய் மேத்தா!

பி.-சோ.-வும் காங்கிரசும் அடிப்படையில் வேறுபட்டன அல்லவாம்!

திரு—கொச்சியில் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் பி.-சோ. மந்திரிசபை, மாநிலத்தின் நலன்களுக்கு சாதகமாயிருக்கிறவரை காங்கிரஸ் கட்சியின் ஆதரவைப் பெறும்.

"திரு—கொச்சியில், காங்கிரஸ், ஆட்சியில் இல்லாதிருப்பதிலும் இலாபமிருக்கத்தான் செய்கிறது; வருகிற பொதுத் தேர்தலில் காங்கிரசுக்கு வெற்றிக்கான சந்தர்ப்பங்கள் முன்னை விட நிறைய இருக்கின்றன,"

—என்று, அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் பல்வந்த்ராய் மேதா பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டார்.

"இந்த மாநிலத்தில், காங்கிரஸ் ஆட்சி பீடமேறுதற்குக் காரணம், வாக்காளர்கள் காங்கிரசுக்கு பரிபூரணமாக—பெருவாரியான வாக்குகளைத் தரவில்லை.

மேலும், இப்போதுள்ள மந்திரி சபையின் அடிப்படைக் கொள்கைகள், காங்கிரஸ் கட்சியினுடையவையிலிருந்து மாறுபட்டவை அல்ல என்பதால்தான், காங்கிரஸ், ஆதரவு தர தீர்மானித்தது,"

என்று, குறிப்பிட்டுவிட்டு, மேலும் பல்வந்த்ராய் மேதா அவர்கள் குறிபிட்டதாவது:

"பி.-சோ. கட்சியுடன் கூட்டு சேருவதில் உள்ள ஒரு கஷ்டம் என்னவெனில், சாதாரண காலத்தில் அது ஒரு நல்ல முயற்சியாக அமையாது; ஒரு நெருக்கடி நிலையில்தான் கூட்டாகச் சேர்ந்து, நாட்டிற்கு ஏற்படுகிற ஆபத்தை எதிர்க்க ஒன்றுபட்டு வேலை செய்ய வேண்டிவரும்," என்றார்.

பட்டம் தாணுவின் ஆட்சிக்கு தொழிலாளர் எதிர்ப்பு

ம. சோ. ஆட்சியை ஆதரிக்கக் கூடாதென காங்கிரசிற்குக் கோரிக்கை

சட்டசபை காங்கிரஸ் கொரடா தலைமையில் எதிர்ப்புத் தீர்மானம்

திருச்சூர், அக். 12—

"கடந்த ஆறு மாத காலமாக திரு—கொச்சி ஆட்சிபீடத்திலமர்ந்திருக்கிற பி.-சோ. கட்சி சர்க்கார், தொழிலாளர்களிடம் கையாண்ட கொள்கைகள் மிகவும் துரோகமானதாயிருக்கின்ற காரணத்தால், அம்மந்திரி சபை உடனே ராஜினாமா செய்ய வேண்டும்.

"பி.-சோ. சர்க்காருக்கு அளித்து வரும் ஆதரவை காங்கிரஸ் கட்சி உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும்,"

இவ்வாறு, திருச்சூரில் அழகப்பா ஜவுளி மில் தொழிற் சங்கக் காங்கிரசின் பொதுக் கூட்டமொன்றில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

கொச்சி மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் தலைவரான கே. கருணாகரன் எம். எல். ஏ. தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில்தான் மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

—"தினமலர்": 14-10-54

காங்கிரஸ் போக்கில் தேர்தல் பேச்சு!

மந்திரி குஞ்சுவின் மனப்புழுக்கம்!

மலபார் மாவட்டக் கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்ட திரு—கொச்சி அமைச்சர் பி. கே. குஞ்சு, திரு—கொச்சியில் ஆட்சியிலிருந்து வரும் பி. சோ. சர்க்காரைக் குறித்து துஷ்பிரச்சாரம் நடப்பதாக மன வருத்தப்பட்டுக் கொண்டார்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

இலங்கை பிரச்சினையில் தி. மு. கழகக் கருத்து!

இலங்கை பத்திரிகையாளரிடம் தோழர் நெடுஞ்செழியன் விளக்கம்

தென்னாட்டில் இந்தி தேசிய மொழி ஆக முடியாது!

கொழும்பு, அக். 15—

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'ஏர்சிலோன்' விமானம் மூலம் கொழும்பு வந்து சேர்கிறார் என்ற செய்தியைக் கேள்வியுற்ற மக்கள் நேற்று நண்பகல் 2 மணி முதலே விமான நிலயத்தில் கூட ஆரம்பித்துவிட்டனர்.

நேற்றுக் காலையிலிருந்து தொடர்ந்து அடை மழை பெய்தும், கொழும்பு தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்தோரும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தோரும் ஆயிரக்கணக்கில் கூடிவிட்டார்கள்.

கழகத் தோழர்கள் கழகக் கொடிகளை ஏந்திக்கொண்டு விமான நிலயத்தில் வரிசையாக அணிவகுத்து நின்றனர்.

இளைஞர்களும், மாணவர்களும் விமானம் வரும் வழி நோக்கி விழி வைத்துத் துடிப்புணர்ச்சியோடு தோழர் நெடுஞ்செழியன் வருகையை எதிர்பார்த்திருந்தனர்.

தோழர் நெடுஞ்செழியன் ஏறி வந்த விமானம் நேற்று மாலை சரியாக 3-25 மணிக்குக் கொழும்பு இரத்மலானை விமான நிலயத்தில் வந்திறங்கிற்று.

மழை பெய்து கொண்டிருந்ததால், விமானத்திலிருந்து விமான நிலயக் கட்டிடத்திற்கு, விமானத்தில் வந்தவர்களைக் கொண்டுவந்து சேர்க்க விமான நிலய பஸ் பயன்படுத்தப்பட்டது.

தோழர் நெடுஞ்செழியன் பஸ்ஸிலிருந்து அடியெடுத்து வைத்தவுடன் கூடியிருந்த மக்கட் கூட்டம் "நெடுஞ்செழியன் வாழ்க!", "அண்ணா வாழ்க!", "திராவிட நாடு திராவிடர்க்கு ஆகட்டும்!", என்ற வாழ்த்தொலிகளை நிலயக் கட்டிடம் அதிரும் அளவுக்கு எழுப்பிற்று..

தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் சிரித்த முகத்தோடு அணுகும்போது, மக்கள் கூட்டம் அவரை மொய்த்துக்கொண்டு மேற்கொண்டு நகரவொட்டாமல்செய்துவிட்டது.

மக்கட் கூட்டத்தை ஒருவாறு விலக்கிக்கொண்டு, கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவரும் வழக்கறிஞருமான தோழர் வே. அ. கந்தையா அவர்களும், சங்கத் துணைத்தலைவர் தோழர் எம். மதியாபரணம் அவர்களும், சங்கப் பொதுச் செயலாளர் தோழர் வித்துவான் வி. எம். கனகசுந்தரம் அவர்களும் மலர்மாலைகள் சூட்டி வரவேற்றனர். பல்வேறு சங்கங்களைச் சார்ந்தோர் பிறகு தனித்தனியாக மாலைகள் சூட்டினர்.

தோழர் நெடுஞ்செழியன் புன்முறுவலோடு அவர்களுக்கெல்லாம் அஞ்சலி செய்துவிட்டு, போட்டோ எடுப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்திற்குச் சென்றார். பல பத்திரிகைகளையும் சேர்ந்த போட்டோக்காரர்கள், தோழர் நெடுஞ்செழியனைப் பல வித நிலயிலும் போட்டோக்கள் எடுத்தனர்.

பிறகு செய்தித்தாள் நிருபர்கள் அடங்கிய கூட்டத்திற்குத் தோழர் நெடுஞ்செழியன் அழைக்கப்பட்டார். அவர்களுக்குப் பேட்டி ஒன்று அளித்தார்.

ஒரு நிருபர்: இலங்கை மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

நெடுஞ்செழியன் பதில்:— இலங்கை மக்களிடையில் சில நாட்கள் தங்க வசதி ஏற்பட்டதுபற்றி பெரும் மகிழ்ச்சியடைகிறேன். அவர்களது நல்லன்பும், நன்மதிப்பும் எனக்குக் கிட்டும் என்று கருதுகிறேன். என்னை வரவழைத்து பெருமைபடுத்தியமைக்காகக் குறிப்பாகக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தார்க்கும், பொதுவாக இலங்கை மக்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நிருபர்: இலங்கை இந்தியர் பிரச்சினை பற்றித் தாங்கள் ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

பதில்: இல்லை. இலங்கை அரசியல் சம்பந்தமாக நான் எதுவும் கூற விரும்பவில்லை. அதற்காக நான் வரவில்லை. இலங்கையில் வாழும் இந்தியர்களின் நிலைமையைப் பற்றி இனி இங்குதான் நான் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்.

ஒரு நிருபர்: இலங்கை - இந்தியர் பிரச்சினை குறித்து டில்லியில் ஏற்பட்ட உடன்படிக்கை பற்றித் தென்னிந்திய மக்கள் என்ன கருதுகிறார்கள்?

பதில்: தென்னிந்திய மக்களைப் பொறுத்தவரையில்இந்தஉடன்படிக்கை தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாத புதிராகவும், குழப்பம் பயப்பதாகவும் இருக்கிறது.

ஒரு நிருபர்: தி. மு. கழகம் என்ன கருதுகிறது?

பதில்: தென்னாட்டு அரசாங்கமும், தென்னாட்டுத் தலைவர்களும் கலந்துகொள்ளாமல் செய்யப்படும் எந்த முடிவும், இலங்கைவாழ் தமிழர்களின் பிரச்சினையை அவ்வளவு நல்ல முறையில் தீர்ப்பதாக அமையாது என்றுதான் கருதுகிறது.

ஒரு நிருபர்: ஆட்சி மொழியைப் பற்றி ஏதாவது கூறுவீர்களா?

பதில்: இலங்கையைப் பொறுத்த வரையில் இல்லை; ஆனல், இந்தியாவைப் பொறுத்த வரையில் ஆங்கிலமே பொது மொழியாக இருக்கலாம் என்று கூறுவேன். உலகப் பொது மொழியாக விளங்கும் ஆங்கிலமே இந்தியாவுக்கும் பொது மொழியாக இருக்குமேயானல், அது எல்லா வகையிலும் நன்மை பயப்பதாக இருக்கும். ஆனல், பிரதேச மொழிகள் தாம் பிரதேசவாரியாக ஆட்சி மொழியாக அமைய வேண்டும். ஒருவருக்கு ஆட்சி மொழியாகிய பிரதேச மொழியும், பொது மொழியாகிய ஆங்கிலமும் மட்டுமே போதும். இந்தி ஒருபோதும் பொது மொழி ஆக முடியாது; ஆகவும் கூடாது.

ஒரு நிருபர்: தாங்கள் தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளராகப் போவதாகச் சொல்லப்படுகிறது. அப்பதவியை ஏற்றுக் கொள்ளப் போகிறீர்களா?

பதில்: அது ஏற்றுக்கொள்ளக் கூடாத ஒரு பதவி அல்லவே! பொதுக் குழு முடிவு செய்தால் அதற்குக் கட்டுப்பட வேண்டியதுதான் என் கடமை.

செய்தித்தாள் நிருபர்கள் பேட்டி முடிந்த பின்னர், தி. மு. க.-வின் பல்வேறு கிளைகளின் பிரதிநிதிகள் இருந்த இடத்திற்கு தோழர் நெடுஞ்செழியன் அழைத்துச் செல்லப்பட்டார். ஒவ்வொரு கிளையின் சார்பாகத் தோழர் நெடுஞ்செழியனுக்கு 'மாலை அணிவிக்கப்பட்டது. இலங்கை தி. மு. க.-வின் பொதுச் செயலாளர் தோழர் அதி. மணி அவர்கள் ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தார். பின்னர் அவர்கள் எல்லோரிடத்திலும் விடைபெற்றுக் கொண்டு வாழ்த்தொலிகளுக்கிடையே தோழர் நெடுஞ்செழியன் புறப்பட்டார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் தோழர் வே. அ. கந்தையா அவர்களும், பொதுச் செயலாளர் தோழர் கனகசுந்தரம் அவர்களும் தோழர் நெடுஞ்செழியனைக் காரில் அழைத்துக் கொண்டு "கிரீன் லாண்ட்ஸ்" ஹோட்டலுக்குச் சென்றார்கள்.

தோழர் நெடுஞ்செழியன் அங்கு இருந்து கொண்டு பலருக்கும் பேட்டியளித்து வருகிறார். இன்றும், நாளை, நாளை மறுநாளும் தமிழ்ச் சங்க ஆண்டுவிழாக் கூட்டங்களில் கலந்துகொள்வார்.

(ந.-வி.-நி.)

சூருவளியின் விளைவு: 176 பேர் பலி!

கானடாவில், ஒண்டாரியா எனும் பகுதியில் ஏற்பட்ட மிகப் பெரிய சூருவளிக் காற்றின் விளைவாக, இடிந்து சரிந்துகிடந்த வீடுகளிலிருந்தும், ஆற்றங்கரையோரங்களிலிருந்தும் 56 பேர்களின் பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளனவாம். சுமார் 176 பேருக்கு மேல் மாண்டிருக்கலாமென்று தெரியவருகிறது.

வேகக் கட்டுப்பாடுகள்

ரயில் பாதைகளில் இன்னும் சுமார் 2,000 மைல்களில் வேகக் கட்டுப்பாடுகள் அமுலில் இருந்து வருகின்றன.

நேபாளத்தில் ஒத்துழையாமை இயக்கம்!

ஆளும் கட்சியினரே ஆரம்பித்துள்ளனராம்!

பலர் கைது — போலீசார் தடியடி!

கோரக்பூர், அக். 17—

நேபாளப் பிரதம மந்திரியான கொய்ராலாவைச் சார்ந்துள்ள கட்சியான தேசீய ஜனநாயகக் கட்சி, ஒத்துழையாமை இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த இயக்கம் பாய்ராக்வா மாவட்டத்தில் உள்ள பராசிப் பகுதியில் நடைபெறுவதாகத் தெரிகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துபவர்கள் 12 கோரிக்கைகளை வெளியிட்டுள்ளனராம். ஆனல், அந்தக் கோரிக்கைகள் இன்னின்ன என்பது தெரியவில்லை.

சர்க்காருக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக, நேபாள ஆலோசனைக் கவுன்சில் உறுப்பினரான பாண்டே உட்பட, இயக்கத் தலைவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

இதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய தொண்டர்கள் மீது போலீசார் தடியடிப் பிரயோகமும் செய்திருக்கின்றனர்.

சில விவசாயிகள், கோர்ட்டுகளின் முன் மறியல் செய்தனராம். அவர்களில் 5 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

மறியலின்போது கூட்டம் அதிகமாகிவிடவே, அன்றும் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்திருக்கின்றனர். பலருக்குக் காயம், இருவருக்கு பலத்த அடி என்றும் தெரிகிறது.

மில் தொழிலாளருக்கு முன்பணம்!

1952—53 ஆண்டிற்கான போனஸ் பற்றி நிர்ணயிக்க சர்க்காரால் நியமிக்கப்பட்ட குழுவின் தீர்ப்பிற்கிணங்க, கோயம்புத்தூரிலுள்ள 30 ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு ரூ. 30 - வீதமும், மற்றும் 5 ஆலைகளிலுள்ளவர்களுக்கு ரூ. 25 வீதமும் முன்பணம் தர ஆலைகள் இணங்கியுள்ளன என்று தெரிய வருகிறது.

ஏற்கனவே போனஸ் வழங்கியுள்ள 3 ஆலைகளை இத்தீர்ப்பு கட்டுப்படுத்தாது.

திருமணங்கள்

★

மதுரை நகர் தி. மு. க. பிரமுகர் தோழர் என். ராமநாதனுக்கும்—திருப்பூர் இளைஞர் காங்கிரஸ் காரியதரிசி தோழர் குப்தா அவர்களின் சகோதரி சம்பூர்ண லட்சுமிக்கும், திருப்பூர் மணமகன் இல்லத்தில், திருமணம் நடைபெற்றது. தோழர்கள் பி. எஸ். மணியன், மைனர் மோசஸ், திருப்பூர் மொகையதீன் ஆகியோர் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுரியது—பொறுப்பாளர்.

* * *

சென்னை 3-வது வட்டம் தோழர் பொன்னுச்சாமி—தோழியர் சொர்ணம்மாள் திருமணம், 17—10—54 இரவு 8 மணிக்கு, இராயபுரம் 2-வது வட்டம் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்ற மேடையில் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெற்றது. மணமக்கள் வாழ்க்கை ஒப்பந்த உறுதி மொழிகளைக் கூறி, மலர்மாலைகள் சூட்டிக் கொண்டார்கள்; தாலியும் கட்டிக்கொண்டார்கள். தலைவர் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்குகையில், அறிவுக்குப் பொருத்தமான முறையில் மணமக்கள் இருவர் விருப்பம் அறிந்து, ஒன்றுபட்டு இல்வாழ்க்கை தொடங்குவதை, எளிய முறையில் திருமண நிகழ்ச்சிகளை நடத்த சமூகத்திலுள்ள பெரியார்கள் உதவி செய்ய வேண்டுமென்றும், இத்தகைய திருமணங்களை மக்கள் யாவரும் ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 - அன்பளிக்கப்பட்டது — பெற்றுக் கொண்டோம் — நன்றியுரியது — பொறுப்பாளர்.

பெயர் சூட்டு விழா

★

சென்னை இராயபுரம் 2-வது வட்டம் தி. மு. கழகத் தோழர் கே. ஈ. சம்பந்தம் அவர்களுடைய ஆண் குழந்தைக்குப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், 17—10—54-ல், 'வீரமணி' என்று பெயர் சூட்டினார்கள். இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பு அளிக்கப்பட்டது—பெற்றுக் கொண்டோம் — நன்றியுரியது—பொறுப்பாளர்.

* * *

சென்னை கொண்டித்தோப்பு, எண் 93 அம்மன்கோவில் தெரு தோழர் பி. ராஜன் அவர்களுக்கு 9—9—54-ல் பிறந்த ஆண் குழந்தைக்கு 17—10—54 இரவு 8-30 மணிக்கு இராயபுரத்தில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் 'அன்பழகன்' என்று பெயர் சூட்டினார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது—பெற்றுக் கொண்டோம் — நன்றியுரியது—பொறுப்பாளர்.

* * *

18—10—54 இரவு 8-30 மணியளவில் நடைபெற்ற பெரம்பூர் செம்பியம் தி. மு. கழக பொதுக் கூட்டத்தில், சூளை பட்டாளம் தோழர் ஜானகிராமன் அவர்கள் பெண்குழந்தைக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் "மருதவல்லி" என்று பெயர் சூட்டினார். அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது —வரப்பெற்றோம் நன்றியுரியது—பொறுப்பாளர்.

இங்கிலாந்தின் பொருளாதாரத்திற்கு இடி!

மலேயா குடிமக்களாக 22,206 பேர் பதிவு!

பெரும்பாலோர் இந்தியர்களே

சிங்கப்பூர், அக். 16—

மலேயா பிரிட்டிஷ் காலனியின் குடிகளாக 22,206 காமன்வெல்த் குடி மக்கள் தங்களைப் பதிவு செய்துகொண்டார்களாம். இவ்வாறு பதிவு செய்துகொண்டவர்களில் பெரும்பான்மையினர் இந்திய நாட்டவரே யாகும்!

பதிவு செய்துகொள்ள அங்கு விசேட வசதிகள் பல செய்யப்பட்டிருந்தன; பலப் பல விடங்களிலும் விசேட பதிவுக் காரியாலயங்கள் நிறுவப்பட்டிருந்தன; ஒவ்வொரு இடத்திலும், விசுவாசப் பிரமாணம் வாங்கிக் கொள்வதற்காக முழு நேர அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

நேற்றோடு இந்த விசேட வசதிகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும், மேலும் பதிவு செய்துகொள்ள விருப்பவர்களுக்குகாலனிஅமைச்சரிடம் தபால் மூலம் மனுச்செய்துகொள்ள வசதி தந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதுவரையிலும், தங்களை காலனி குடி மக்களாகப் பதிவு செய்துகொண்டவர்கள் வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள் என்றும் அடுத்த ஆண்டில் மலேயாவின் புதிய கீழ் சபைக்கு நடைபெறவிருக்கும் தேர்தலில், அவர்கள் வாக்குப் பதிவு செய்ய உரிமை வழங்கப்படுவர் என்றும் தெரிகிறது.

லண்டன் வேலை நிறுத்தம்— லிவர்பூலுக்கும் பரவுகிறது!

லண்டன், அக். 18—

லண்டன் துறைமுகத் தொழிலாளர்கள் 27,000 பேர் கடந்த 15 நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனரல்லவா? அவர்களுக்கு அனுதாபமும், ஆதரவும் தெரிவிக்கும் முகத்தான் லிவர்பூல் துறைமுகத் தொழிலாளர்கள் 10,000 பேரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதன் விளைவாக இங்குள்ள 18 3 கப்பல்களும் வேலை செய்ய ஆட்களின்றி நிலை நின்றுவிட்டன.

இப்போது லண்டன், லிவர்பூல் துறைமுகங்கள் முழுவதும் வேலையின்றிப் போய்விட்டால் பிரிட்டனின் பொருளாதாரமே பாதிக்கப்படும் என்ற அச்சம் மேலோங்கி நிற்கிறது. ஏனெனில் இவ்விரு துறைமுகங்களின் வழியாகவும் தான், பிரிட்டனின் ஏற்றுமதி வியாபாரத்தில் மூன்றில் இரண்டு பகுதியும், இறக்குமதி வியாபாரத்தில் பாதிக்கு மேலும் நடைபெறுகிறது.

தாழ்த்தப்பட்ட தோழருக்கு சிற்றுண்டி மறுத்ததின் விளைவு!

ஐயரின் ஜாதி வெறிக்கு காங்கிரஸ் முக்கியஸ்தர் ஆதரவு!

வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்கா, விஷமங்கலம் கிராமத்தில், கிராம காங்கிரஸ் கட்சித் தலைவரும், கஸ்தூரி சிற்றுண்டிச்சாலை உரிமையாளரின் தம்பியுமான திரு. ஆர். வி. வெங்கட்டரமண அய்யர், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தோழர் ராமலிங்கம் என்பவருக்கு கடந்த 10-10-54 அன்று தனது சிற்றுண்டி விடுதியில் உணவு வழங்க மறுத்துவிட்டாராம்!

இத்தகவல் திருப்பத்தூர் தாலுக்கா போலீஸ் சப்-இன்ஸ்பெக்டருக்கு அறிவிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார், திரு. ஆர். வி. வெங்கட்டரமண அய்யரை 17-10-54 அன்று கைது செய்து, பின்னர் ஜாமீனில் விடுதலை செய்துள்ளனராம்.

இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு தொடராமலிருக்க, திருப்பத்தூர் காங்கிரஸ் பிரமுகர்கள் முயற்சித்தும் பலன் அளிக்கவில்லையாம்.

தொடரப்பட்ட வழக்கு அண்மையில் விசாரணைக்கு வரும் என்று தெரிகிறது. —ந. நி.

எம். ஆர். இராதா வழக்கில் தீர்ப்பு

அபராதத் தொகையை திருப்பிக் கொடுக்க உத்திரவு

நடிகர் எம். ஆர். இராதா அவர்களுக்குப் பிரதம மாகில மாஜிஸ்திரேட் விதித்திருந்த ரூ. 500 அபராதத் தொகையை அவர்செலுத்தியிருந்தால், அந்தத் தொகையைத் திரும்பவும் இராதா அவர்களிடமே கொடுத்துவிட வேண்டுமென்று சென்னை உயர்நீதி மன்ற பிரதம நீதிபதி, நீதிபதி ராஜகோபாலய்யங்கார் ஆகியோர் கொண்ட 'பெஞ்சு' உத்திரவிட்டது.

தடை செய்யப்பட்ட நாடகங்களை நடித்தார் 'என்ற அவர் மேலுள்ள குற்றச்சாட்டுகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கையில், நாடகம் நடத்துவது சம்மந்தப்பட்ட 1876-ம் ஆண்டுச் சட்டம் செல்லத் தக்கதல்ல என்பதை அட்வகேட் ஜெனரலே ஒப்புக்கொள்ளுகிறார் என்றும், ஆகவே, அவருக்களிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்வதாகவும் நீதிபதிகள் கூறினர்.

மத்திய பாரத் மந்திரி சபை

மாற்றம் இருக்காது!

குவாலியர், அக். 17—

மத்திய பாரத் முதன் மந்திரியான மிஷ்ரிலால் சக்வால், தனது மந்திரிசபையில் இப்போது மாற்றம் எதும் இருக்காதென அறிவித்துள்ளார்.

காங்கிரஸ் 'பார்லிமெண்டரி போர்டு' தனக்கு அந்த அதிகாரத்தைத் தந்திருந்தபோதிலும்,தான்; மந்திரி சபையில் மாற்றம் செய்வதினாலேயே நிர்வாகத் திறமை அதிகரித்து விடுமென எதிர்பார்க்கவில்லை யென்று கூறினாராம்.

புயல் உருவாகிறது!

சென்னைக்குத் தென்கிழக்கே சுமார் 700 மைல்கள் தொலைவில், வங்காளக் குடாக் கடலில் புயல் உருவாகிறதாகக் கூறப்பட்டுள்ளது.

செகந்திராபாத்திலுள்ள 'இம்பீரியல்' பாங்கியின் கிளை யொன்றில், சென்ற 16-ந் தேதியன்று மட்டும் 22 போலி நூறு ரூபாய் நோட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக போலீஸ் இலாகாவின் தகவல் ஒன்றின் மூலம் தெரியவருகிறது.

மத்திய கிழக்குப் பாதுகாப்பு

ஈராக்-துருக்கி நாடுகள் சேர இணக்கம்

மத்திய கிழக்கில் தக்கதோர் பாதுகாப்பு அமைப்பை ஏற்படுத்துவது அவசியம் என்று துருக்கி பிரதமர்—ஈராக் பிரதமர் ஆகிய இருவரிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது வற்புறுத்தப்பட்டதாம்.

இருவருடைய பேச்சுக்களின் முடிவின்போது வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், உலக சமாதானத்தைக்காக்க இரு நாடுகளுக்கிடையே ஐ. நா. சபையின் கொள்கைக்கு விரோதமின்றியும், நாடுகளின் சுதந்திரத் தன்மைக்கு மாசு ஏற்படாதவாறும், தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் அந்த நாடுகளைக் கொண்டுவர செய்யப்படும் முயற்சியை எதிர்க்கவும் மத்திய கிழக்கில் பாதுகாப்பு அமைப்பு ஒன்று உருவாக்குவது அவசியம் என்று இரு நாடுகளும் கருதுவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தாமதமின்றி மத்திய கிழக்கு பாதுகாப்பிற்கு தேவையானவற்றைச் செய்ய அவை ஒப்புக்கொண்டிருக்கின்றன என்று மேலும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

கணவனுடன் உடன்கட்டை!

தீயில் குதித்து தற்கொலை!

ஜோத்பூர், அக். 19—

இறந்துபோன பிரிகேடியர் ஜாபர் சிங்கின் மனைவியான பீராவைச் சேர்ந்த தக்குராணி என்பவர் தன் கணவருடன் உடன்கட்டை ஏறினர் என்று தெரிகிறது.

ஜோத்பூர் அரசரின் அரண்மனை கணக்கு அதிகாரியாக பிரிகேடியர் ஜாபர்சிங் பணியாற்றினர் என்றும், அவரது மனைவியின் உடன்கட்டை ஏற்றம்பற்றிய செய்தி தங்களுக்குத் தாமதமாகக் கிடைத்ததாகவும் போலீசார் கூறினர்.

'சதி' நடைபெற்றதை நேரில் பார்த்த ஒருவர், தக்குராணி தன் குமாரர்கள், உறவினர்களின் பிடியிலிருந்து தீயில் திடீரென பாய்ந்துவிட்டார் என்று கூறினாராம்!

இப்போது போலீசார் அந்த இடத்தைக் காவல் புரிகின்றனராம்!

பிரெஞ்சிந்திய இணைப்பு

கையெழுத்தாவதில் தாமதம்

புது டில்லி, அக். 19—

பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் இணைப்பு பற்றி இந்தியா-பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளிடையே இன்று கையெழுத்தாக இருந்த ஒப்பந்தம் கையெழுத்தாகவில்லை என்று தெரிகிறது.

பிரெஞ்சுப் பிரதமர் மெண்டே பிரான்சிடமிருந்து கடைசி உத்தரவு டில்லியிலுள்ள பிரெஞ்சுத் தூதுவர் ஆஸ்டிராங்கிற்குக் கிடைக்கவில்லை என்று தெரிகிறது.

உலகவிவகாரங்களில் மெண்டே பிரான்ஸ் அதிக கவனம் செலுத்துவதால் இதுபற்றி அவர் செய்தி அனுப்பவில்லை என்று கூறப்படுகிறது.

தாமதம் ஏற்படுவது பற்றி யாரும் கவலைப்படவில்லை என்றும், சீக்கிரமே ஒப்பந்தம் கையெழுத்தாகுமென்றும் கூறப்படுகிறது.

கழகக் கூட்டம்

★

வீரசோழபுரம்

முத்துசேர்வாமடம்

தி. மு. கழகத் துவக்க விழா

22—10—54 வெள்ளி மாலை

தலைவர் : கி. அரங்கநாதன்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

லா. நா. இராமலிங்கம்

சு. இளநாகன்

கொடி ஏற்றுபவர் :

பொ. தருமன்

இரங்கற் கூட்டம்

21—10—54 மாலை 6 மணிக்கு சென்னை அண்ணாமலை மன்றத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மறைவுக்கு இரங்கற் கூட்டம், சென்னை முதல் அமைச்சர் காமராசர் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சேதுப்பிள்ளை, ம. பொ. சி, ஜீவானந்தம், ராஜா சர் முத்தையா செட்டியார் ஆகியோர் பேசுவர். தோழர்கள் எம். எம். தண்டபாணி தேசிகரும், டி. கே. சண்முகமும் கவிமணியின் பாடல்களைப் பாடுவர்.

சீனத் தலைநகரில் பண்டித நேரு

தலைவர்களுடன் உரையாடல்

சீன மக்கள் தந்த வரவேற்பு

பீகிங், அக். 19—

இந்தியப் பிரதமர் பண்டித நேரு இன்று பகல் 12 மணியளவில் பீகிங் வந்தடைந்தார்.

அவரை விமான நிலையத்தில் சீனப் பிரதமர் சூ-என்-லாய், இன்னும் இதர அதிகாரிகள் வரவேற்றனர்.

விமான நிலையத்தில் சீன இராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்டுவிட்டு, நேரு சிறிது நேரம் இந்தியில் பேசினார்.

பின்னர் அவர் விமான நிலையத்திலிருந்து 10 மைல் தொலைவில் உள்ள நகரத்திற்கு, ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். திறந்த கார் ஒன்றில் அவரும், சீனப் பிரதமரும் ஊர்வலம் வந்த காட்சியை பல்லாயிரக்கணக்கான சீன மக்கள் கூடி நின்றுகொண்டனர்.

பின்னர், நேரு, சீனக் குடியரசுத் தலைவர் மா-சே-துங்குடன் சுமார் 1½ மணி நேரம் உரையாடினார்.

சூ-என்-லாய், சூ-டே போன்றவர்கள், பண்டிதருக்கு விருந்தளித்தனர். பல அதிகாரிகள் விருந்து வைபவத்தில் கலந்து கொண்டனர்.

பண்டித நேரு, மாசே-துங் ஆகியோர் இன்னும் பலமுறை சந்தித்து, பல்வேறு அரசியல் பிரச்சினை குறித்துப் பேசுவார்கள் என்று தெரிகிறது.

இந்த வைபவங்களில் திருமதி சன்யாட்சென்னும் கலந்துகொண்டது குறிப்பிடத்தகுந்ததாகும்.

பி. ஜி. கெர்

காங்கிரஸ் தலைவராவார்?

பம்பாயின் முன்னாள் பிரதமரும், சில காலம் லண்டனில் இந்தியத் தூதுவராக இருந்தவருமான பி. ஜி. கெர் காங்கிரசின் தலைவராக தகுதி உடையவர் என்று ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் தலைவர் கோபால் ரெட்டி ஆதரிப்பதாகத் தெரிகிறது.

20,000 தொழிலாளருக்கு போனஸ் தொகை!

மதுரை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள 'ஹார்வி' மில்களில் வேலை செய்யும் சுமார் 20,000 தொழிலாளர்களுக்கு, இவ்வார இறுதிக்குள் அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தில் ஒன்றரை மாதச் சம்பளம் 'போனஸ்' தொகையாக அளிக்கப்படும் என்று தெரிகிறது.

இந்தோனேஷிய மந்திரி சபையில் நெருக்கடி!

கூட்டு சேர்ந்ததின் விளைவு!

இந்தோனேஷியாவில் பிரதமர் டாக்டர் சாஸ்த்ரோமித் ஜோ ஜோ தலைமையில் உள்ள கூட்டு மந்திரி சபைக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த மந்திரி சபை பதினைந்து மாதங்களுக்கு முன்னால் பதவி ஏற்றது.

அரசாங்கத்தினுடைய பொருளாதார, வரவு செலவுத் திட்டங்கள் குறித்து டாக்டர் சிமிஸ்டரின் கட்சியினர் தொடர்ந்து கண்டனக் குரல் எழுப்பி, கொள்கை மாற்றம் கோரி வந்தனராம். அது நடைபெறவே இல்லை. எனவே, வருகிற அக். 25-ந் தேதிக்குள் இப்போதுள்ள மந்திரி சபை ராஜினமா செய்யாவிடில் கூட்டு மந்திரி சபையில் அங்கம் வகிக்கும் தனது கட்சியைச் சேர்ந்த மூன்று மந்திரிகளையும் ராஜினமாச் செய்யக் கூறுவதாக டாக்டர் சிமிஸ்டர் அச்சுறுத்தியுள்ளார் என்று தெரிகிறது.

[டாக்டர் சாஸ்த்ரோமித் ஜோ ஜோ சென்ற மாதத்தில் டெல்லி வந்து பண்டித நேருவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி, ஆசிய சமாதானத்திற்காகப் பாடுபடுவதாக உறுதி கூறி, ஆசிய, ஆப்பிரிக்க மாநாடொன்றைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளையும் செய்வதாக வாக்குறுதி தந்து, பண்டித நேருவுடன் சேர்ந்து கூட்டறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தகுந்தது.]

500 மாணவர்கள் வேலை நிறுத்தம்

விடையளிக்கும் தாள்கள் இலவசமாகத் தரக் கோரினர்!

அகமதாபாத், அக். 18—

அகமதாபாத்திலுள்ள உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் 500 பேர், தங்களுக்குப் பரீட்சை காலத்தில் விடையளிக்கத் தரப்படும் தாள்களை பள்ளி நிர்வாகிகள் இலவசமாகத் தர வேண்டுமெனக் கோரினர். நிர்வாகிகள் மறுக்கவே, அம்மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

மூன்று நாட்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் நடைபெற்று நேற்று மீண்டும் மாணவர்கள் பள்ளி செல்கிற நிலையில் சமரசப் பேச்சுகள் நடைபெற்றிருக்கின்றன. ஏற்பட்டுள்ள சமரசப்படி மாணவர்கள், விடையளிக்கும் தாள்களுக்கான கட்டணத்தைத் தந்து விட வேண்டுமெனவும், பள்ளி நிர்வாகிகள், மாணவப் பிரதிநிதிகளின் ஆலோசனையின் பேரில் அத்தொகையினை மாணவர்கள் நலனுக்காகச் செலவிடுவர் என்றும் முடிவாகியுள்ளதாகத் தெரிகிறது.

10 கம்யூனிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்

பாரசீக சர்க்கார் நடவடிக்கை

தெஹ்ரான், அக். 1[illegible]—

பாரசீக கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் எனக் குற்றம் சாட்டி பத்து பேர்களை பாரசீக துப்பாக்கிப் படையினர் சுட்டுக் கொன்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த பத்து பேரும் இரகசியமாக விசாரணை செய்யப்பட்டனர்.

சுட்டுக் கொல்லப்பட்ட பத்து பேர்களில் ஒன்பது அதிகாரிகளும் ஒரு சிவிலியனும் உள்ளனர்.

சுட்டுக் கொலை செய்யப்படும் போது, அவர்கள், "எங்கள் இரத்தம் இன்னும் ஆயிரம் பேரை உருவாக்கும்; சுதந்திர பர்சியா இதற்குப் பழி வாங்கும்," என்று கோஷமிட்டார்களாம்.

காங்கிரஸ் போக்கில்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அக்கூட்டத்தில் அவர் பேசியதாவது :—

"திரு—கொச்சியில் பி.-சோ.-சர்க்காரின்மேல் பொய்க் குற்றங்களைச் சுமத்தி இங்குள்ள தேர்தலில் சிலர் பிரசாரம் செய்து வருகின்றனர்; மலபாரில் ஓட்டுக்கள் கிடைக்க வேண்டுமென்பதை இலட்சியமாகக் கொண்டு, தென் திருவாங்கூரில் 600 பேரைக் கொன்ற பி.-சோ. கட்சிக்கு ஓட்டு கொடுக்க வேண்டாம் என்று தட்டிவிட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன்."

—'தின மலர்' : 14-10-54

கால வரையறையின்றி வேலை நிறுத்தம்

பாங்கி ஊழியர் சங்க மாநாட்டில் தீர்மானம்

சென்னை, ஆக. 19—

வருகிற டிசம்பர் திங்கள் 10-ந் தேதியிலிருந்து, காலவரையறையின்றி, வேலை நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டுமென்று, சென்னையில் கூடிய அகில இந்திய பாங்கி ஊழியர் சங்க மாநாட்டின் இறுதி நாள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தொழில் அப்பீல் கோர்ட்டின் தீர்ப்பை மாற்றி சர்க்கார் பிறப்பித்துள்ள உத்திரவை அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளுகிற வரையிலும் தொடர்ந்து இந்த வேலை நிறுத்தம் செய்யப்படும் என்றும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பாங்கி ஊழியர்களின் வருமானத்தைக் குறைக்காமல் தொழில் அப்பீல் கோர்ட்டின் தீர்ப்பையே அமுல் செய்யுமாறும், தற்போதுள்ள உரிமைகளையும் சலுகைகளையும் எவ்விதத்திலும் குறைக்கக் கூடாதென்றும், அகில இந்திய பாங்கி ஊழியர் சங்கத்தையும், அதைச் சேர்ந்துள்ள நிறுவனங்களையும் சர்க்கார் அங்கீகரிக்க வேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாங்கி ஊழியர்களின் பிரச்சினைகளைப் பரீசிலிப்பதற்காக ராஜாத்தியட்சக குழு நியமிக்கப்பட்டது, பொது மக்களை ஏமாற்ற ஏற்படுத்திய ஓர் காரியமாகும் என்று அந்த மாநாட்டில் கருத்தறிவிக்கப்பட்டது.

கூட்டுறவு பாங்கிகளிலும், மாநிலத்திற்கு வெளியே கிளை நிறுவனங்கள் இல்லாத பாங்கிகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்களின் நிலை கண்டு வருந்துவதாகவும், அந்தப் பாங்கிகளிலும் தொழில் அப்பீல் கோர்ட்டின் தீர்ப்பையே அமுல் நடத்துமாறு கேட்டுக்கொண்டும் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தோ-சீன அகதிகள்

தென்வியட்நாமில் தஞ்சம்!

இந்தோ - சீனவில் போர் நின்ற பிறகு சுமார் 3 லட்சம் பேர்கள் தென் வியட்நாமிற்கு அகதிகளாக ஓடி வந்துள்ளனராம், இன்னும் 2½ லட்சம் பேர் அப்படி அகதிகளாக தஞ்சம் புகக்கூடும் என்றும், ஐ. நா. நிறுவனம் கூறுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.